This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# 24 ரூபாய் தீவு

www.writersujatha.com

1

முடிவில்லாத நியூஸ் பிரிண்ட் காகிதம் 'ரோட்டரி' இயந்திரத்தின் பற்பல உருளைகளின் ஊடே ஓடிக்கொண்டிருந்தது. அவ்வப்போது ஒவ்வொரு 'ஸிலிண்டரி'லும் செய்தி வாசகங்களைக் கன்னத்தில் ஒற்றிக் கொண்டு நாளைக் காலையின் ராட்சச கெடுவை நோக்கி விரைந்து கொண்டிருந்தது.

கோபிநாத்–கோபிநாத்–கோபிநாத்–கோபிநாத்–கோ என்று தொடர்ந்து லட்சம் தடவை பதிந்தார். லட்சம் தடவை அந்தப் பிரபலமான சிரிப்பு. கொள்ளை கொள்ளும் பிள்ளைச் சிரிப்பு! அவருக்கு ஐம்பது வயதாகிறது. அந்தப் புகைப்படம் அதைச் சொல்லவில்லை. புகைப்படத்துடன் அருகே அச்சாகிக் கொண்டிருந்த செய்திதான் சொன்னது.

'சென்னை ஜூன் 18–'

தலைவர் கோபிநாத் அவர்களுக்கு நாளை ஐம்பது வயது நிறைவு பெறுகிறது. சென்ற ஆண்டு போல் அவர் தம் பிறந்த தினத்தை ஆரவாரமில்லாமல் தம் இனிய மனைவியுடனும், தம் வளர்ப்பு மகளுடனும் கழிப்பார். பிற்பகல் ஓர் அரிசனப் பள்ளிக்குச் சென்று அவர் பெயரில் ஒரு மதிய உணவு விடுதியைத் திறந்து வைப்பார்...

இந்தச் செய்தியை எழுதியது? நான்.

நான் யார்? ஒரு நிருபன். என் பெயர் விசுவநாத். கிரிக்கெட் என்றால் எனக்கு வெறுப்பு. அதற்காகவே பெயரை விசுவநாதேஸ்வர் என்று மாற்றிக் கொள்ளலாமா என யோசிக்கிறேன். எனக்கு இருபத்து ஐந்தாகிறது. கல்யாணம் ஆகவில்லை. மூன்று தங்கைகள் இருக்கிறார்கள். அவர்கள் கல்யாணத்துக்குப் பிறகுதான் எனக்கு என்று அம்மா ஜாதகம் கேட்கிறவர்களிடம் எல்லாம் கோடி காட்டுகிறார்கள். என் தலைமயிர் எல்லாம் அதற்குள் உதிர்ந்துவிடப்போகிறது. எனக்கு அக்கா ஒருத்தி உண்டு. என் அப்பா பெண்களாகப் பெற்றுத் தள்ளிவிட்டு என் பதினெட்டாவது வயதில் காலமாகிவிட்டார். அவர் ஆத்மா சாந்தி அடையாமல் அம்மா, இன்னம் 'பாழும் பிராமணனை'த் திட்டிக் கொண்டிருக்கிறாள். என் அக்கா கல்யாணத்தை சின்னி கிருஷ்ணன் பாண்டு எல்லாம் வைத்துப் பிரமாதமாக நடத்திப் போண்டியாய் விட்டார். என் தங்கைகளில் ஒருத்தி வேலைக்குப் போகிறாள். அடுத்தவள் சுமதி டைப்ரைட்டிங், ஷார்ட் ஹாண்டு என்று ஏதோ கதை பண்ணிக் கொண்டிருக்கிறாள். ஒரு முதலியார்ப் பையனை 'லவ்' பண்ணுகிறாள் என்ற நினைக்கிறேன். கவனிக்க வேண்டும். கடைசி அவள் எஸ்.எஸ்.எல்.ஸி. நான்தான்–சொன்னேனே, ரிப்போர்ட்டர்.

இங்கிருக்கிற ரிப்போர்ட்டர்களில் நான் ரொம்ப ஜூனியர். பாச்சா என்னை சூ காட்டிவிடுவார். "பொடி நடையாகப் போய் ஒரு பொட்டலம் புகையிலை, நூறு கிராம் காப்பி புவுடர்" என்று ஏவுவார். நான், பாச்சா, நஸீர் திரு.விக்கிரமன் நாயர் (டி.வி.நாயர்).